Koviloor Digital Library

அருள்மிகு செல்வ விநாயகர்

Acc No 39210

Koviloor Digital Library

KOVILO[illegible] [illegible]IDAVAI
LIBRARY, KOVILOOR
39210

Koviloor Digital Library

விநாயகர்

அகவல், பஞ்சரத்னம்

3/2
Acc No: 39210

அஷ்டபந்தன
மஹா கும்பாபிஷேக தினத்தன்று
வழங்கப்பட்டது

நாள் : 5-5-2014 திங்கட்கிழமை

செல்லப்பன் வித்யா மந்திர்
சர்வதேச பள்ளி
ஒ. சிறுவயல் ரோடு, பேயன்பட்டி,
காரைக்குடி - 630 208.

Koviloor Digital Library

ஸ்ரீ கணபதி

காயத்ரீ மந்திரம்

ஓம் ஏகதந்தாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்நோ தந்தீ; ப்ரசோதயாத் ॥

★★★

அற்புதக் கீர்த்தி வேண்டின்
ஆனந்த வாழ்க்கை வேண்டின்
நற்பொருள் குவிதல் வேண்டின்
நலமெல்லாம் பெருக வேண்டின்
கற்பகமூர்த்தி தெய்வக்
களஞ்சியத் திருக்கை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர் !
பொய்யிலை ! கண்ட உண்மை

- கவியரசர் கண்ணதாசன்

Koviloor Digital Library

ஔவையார் அருளிச் செய்த

விநாயகர் அகவல்

காப்பு

அற்புதவி நாயகர்தம்
ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொரளின் குற்றமின்றிச்
சொல்லவே முற்படுசீர்ச்
சொற்பொருளெல் லாங்கடந்து
தூய்தாம் மெய்ஞ்ஞானமிகு
கற்பகவி நாயகன்றான் காப்பு.

நூல்

சீதக்களபச்
செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு
பல இசைப் பாடப்
பொன்னரை ஞாணும்
பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில்
வளர்ந்தழ(கு) எறிப்பப்

Koviloor Digital Library

பேழைவயிறும்
பேரும்பாரக் கோடும்
வேழமுகமும்
விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும்
அங்குசபாசமும்
நெஞ்சில் குடிகொண்ட
நீலமேனியும்
நான்ற வாயும்
நாலிருபுயமும்
மூன்று கண்ணும்
மும்மதச் சுவடும்
இரண்டு செவியும்
இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூலும்
திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த
துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற
கற்பகக் களிறே

Koviloor Digital Library

முப்பழம் நுகரும்
    மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை
    ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத்
    தானெழுந்(து) அருளி
மாயாப் பிறவி
    மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந்
    தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்
    உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக்
    குவலயந் தன்னில்
திருவடி வைத்துத்
    திறம்இது பொருள்என
வாடா வகைதான்
    மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால்
    கொடுவினை களைந்தே

Koviloor Digital Library

உவட்டா உபதேசம்
    புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத்
    தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை
    அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின்
    இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும்
    கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை
    அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந்த
    தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின்
    மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில்
    ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை
    அடைப்பதுங் காட்டி

Koviloor Digital Library
ஆறாதாரத்து
அங்குச நிலையும்
பேறா நிறுத்திப்
பேச்சுரை அறுத்தே
இடைபிங் காலையின்
எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனைக்
கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின்
முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின்
நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில்
கூடிய அசபை
விண்டெழு மந்திரம்
வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து
மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும்
கருத்தறிவித்தே

Koviloor Digital Library

அமுத நிலையும்
ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன்
குணத்தையும் கூறி
இடச் சக்கரத்தின்
ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின்
உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும்
சதுர்முக சூட்சமும்
எண்முக மாக
இனிதெனக்(கு) அருளிப்
புரியட்ட காயம்
புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும்
தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால
வாயில் காட்டி
இருத்தி முத்தி
இனிதெனக்(கு) அருளி

Koviloor Digital Library

என்னை அறிவித்(து)
　　எனக்கருள் செய்து
முன்னை வினையின்
　　முதலைக் களைந்து
வாக்கும் மனமும்
　　இல்லா மனோலயம்
தேக்கியே என்றன்
　　சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கும்
　　ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து)
　　அழுத்தி என்செவியில்
எல்லை இல்லா
　　ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே
　　அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே
　　சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே
　　சிவலிங்கம் காட்டி

Koviloor Digital Library

அணுவிற்கு அணுவாய்
அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற
கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும்
விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர்
குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின்
அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின்
நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத்
தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக!
விரைகழல் சரணே!!

Koviloor Digital Library

முதா கராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதராவ தம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம் |
அநாயகைக நாயகம் விநாசி தேப தைத்யகம்
நதாசு பாசு நாச கம் நமாமி தம் விநாயகம் ||

நதேதராதி பீகரம் நவோதி தார்க்க பாஸ்வரம்
நமத் ஸுராரி நிர்ஜ்ஜரம் நதாதிகாப துத்தரம்
ஸுரேச்வரம் நிதீச்வரம் கஜேச்வரம் கணேச்வரம்
மஹேச்வரம் தமாச்ரயே பராத்பரம் நிரந்தரம்||

ஸமஸ்த லோகச ங்கரம் நிரஸ்ததைத்ய குஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேபவக்த்ர மக்ஷரம் |
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யச ஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் ||

Koviloor Digital Library

அகிஞ்சனார்த்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம் ஸுராரி கர்வ சர்வணம் |
ப்ரபஞ்ச நாச பீஷணம் தனஞ்ஜயாதி பூஷணம்
கபோலதான வாரணம் பஜே புராண வாரணம் ||

நிதாந்த காந்த தந்தகாந்தி மந்தகாந்த காத்மஜம்
அசிந்த்யரூப மந்த ஹீன மந்தராய க்ருந்தனம் |
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்த மேவ யோகிநாம்
தமேகதந்த மேவ தம் விசிந்தயாமி ஸந்ததம் ||

மஹா கணேச பஞ்சரத்ன மாதரேணயோ(அ)ன்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன் கணேச்வரம்
அரோகதா மதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்ட பூதி மப்யுபைதி ஸோ (அ)சிராத்

Koviloor Digital Library
KOVILOOR ANDAVAR
A. No. 39210
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library